# பாதுகாப்பு அதிகாரிகள் மீது ஆயுதக் கோஷ்டி தாக்குதல்!

(கொழும்பு)
புத்தளம் மாவட்டத்தில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படும் இடத்தை சுற்றிவளைக்கமுற்பட்ட நான்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதனல் அவர்கள் நால்வரும் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் சென்ற ஜீப் வண்டியும் முற்றுகச் சேதமாக்கப்பட்டதுடன் இவர்

(2ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 28 இதழ் 63
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 11-04-1995

கொழும்பில் நேற்று

## க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் வெளியாகின

### யாழ் முடிவுகள் இன்று வரலாம்

(கொழும்பு)
கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சை பெறுபேறுகள் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டது. வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான முடிவுகளும் நேற்று

(2ம் பக்கம் பார்க்க)

# நேற்றைய பேச்சுவார்த்தை எதிர்பார்த்த வெற்றி தரவில்லை

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]
நேற்று நடைபெற்ற நான்காம் கட்டப் பேச்சுவார்த்தைகள் வழமை போன்றே எதுவித முடிவுகளையும் எடுக்கக்கூடிய விதத்தில் அமையவில்லை. பேச்சுக்கள் வாக்குறுதிகளாகவும், உறுதிமொழிகளாகவும் இருந்ததே தவிர இந்த பேச்சுவார்த்தையில் எந்தவிதத்திலும் எமது மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய விதத்தில் எந்த முடிவுகளும் எட்டப்படவில்லை. நாமும் எமது மக்களும் எதிர்பார்த்திருந்த பலன் எதுவும் இப் பேச்சுக்களில் கிடைக்கவில்லை.

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரும் நேற்றைய பேச்சுக்களில் புலிகளின் குழுவுக்கு தலைமை தாங்கியவருமான திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தை முடிவடைந்தபின் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

திரு. தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில்;

பொருளாதாரத் தடைநீக்கம், கடல்வலய தடை தளர்வு தொடர்பாக ஏற்கனவே அரசு தெரிவித்திருந்தும், அதிலும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத சில முடிவுகள் அவர்களது கருத்துக்களில் இருந்தபடியால அவற்றில் சில விளக்கங்களை நாம் கோரியுள்ளோம். அதற்கு அவர்கள் ஒருசில நாட்களில் இதுகுறித்து பதில் தருவதாக கூறியுள்ளனர் என்றார்.

அவர் பேச்சுவார்த்தை குறித்து மேலும் தெரிவித்ததாவது:

-சி-இ

## சாதகமான பதிலை தரவில்லை

(யாழ்ப்பாணம்)
போக்குவரத்து பாதை திறப்பு, கிழக்கில் போராளிகள் நடமாட்டம் தொடர்பாகவும் அவர்கள் சாதகமானதொரு பதிலை தரவில்லை. நாம் இதற்கு எமது கருத்துக்களை தெரிவித்தோம். அவர்கள் இதுசம்பந்தமாக ஜனதிபதியுடன் கதைத்து இன்று இதற்கான பதில்களைத் தருவதாகக் கூறியுள்ளனர்.

நேற்றைய பேச்சுக்களில் எதுவித முடிவும் எடுக்கப்

(2-ம்பக்கம் பார்க்க)

## காலக்கெடு பற்றி கூறினேம்

(யாழ்ப்பாணம்)
இப்பேச்சுக்களில் நாம் ஏப்ரல் 19ம் திகதிய எமது காலக்கெடுவை சுட்டிக்காட்டியுள்ளோம். இது தொடர்பாக எமது தலைவர் ஜனதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது கடந்த 6 மாத கால சமாதான பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது இந்த 6 மாத கால பேச்சுக்களில் எமது மக்களது வாழ்க்கை நிலையில் எந்தவிதமான

(4-ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விவகாரம்

பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பாகவும், சில சில பொருட்கள் அதாவது இராணுவ பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களின் தடை நீக்கம் தொடர்பாக முக்கியமாக யூரியா, மற்றும் ஒருசில பொருட்களை தொடர்ந்தும் தடைசெய்வதாகவே கூறியுள்ளனர்.

எரிபொருள் தடையை தளர்த்தி வேறு சிலவற்றில் கட்டுப்பாடுகளை போடுவதாகத்தான் இந்தப் பேச்சுக்களில்

(2ம் பக்கம் பார்க்க)

## பூநகரி; அரசு அசைவதாயில்லை

பூநகரி இராணுவ முகாம் தொடர்பாக அரசு பழைய நிலையிலேயே உள்ளது. அது பற்றி நேற்றைய பேச்சிலும் அவர்கள் தெரிவித்தனர். ஆனல் நாம் இது குறித்து நேற்றைய பேச்சில், எமது இறுதியானதும்,'உறுதியானதுமானமுடிவை அவர்களுக்குத் தெளிவுபடக் கூறியுள்ளோம். அத்துடன் ஏதாவது ஒரு முகாம் முற்றுக அகற்றப்பட்டு, போக்குவரத்துப் பாதை அவசியமாகத் திறக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளோம்.

எமது 4 கோரிக்கைகள் தொடர்பாக நாம் தெரிவிக்க 19ம் திகதிய கால எல்லைக்குள் பிரச்னைகள் தீர்க்கப்படா

(2ம் பக்கம் பார்க்க)

### ஆயர்கென்னத் நிலை

## அதிர்ச்சி தருகிறது

[யாழ்ப்பாணம்]
''அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதான முயற்சியில் நடுநிலைமைவகித்த அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பொனுண்டோவும், விரிவுரையாளர் ஜெயதேவஉயன்கொட ஆகிய இருவரும் தற்போது அரசதரப் ப் பிரதிநிதிகளாக யாழ். நகர் வந்திருப்பது எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது."

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில்

## பத்திரிகையாளர் ஏமாற்றம்!

[கொழும்பு]
யாழ்ப்புாணததில் நேற்று விடுதலைப் புலிகளுடன் நான்காம் கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டுக் கொழும்பு திரும்பிய அரசுத் தரப்புக் குழுவினரை கொழும்பில் உள்ள பத்திரிகையாளர்கள் சூழ்ந்துகொண்டனர்.

ஆனல் அரசுக் குழுவில் இடம் பெற்ற ஜனதிபதியின் செயலர் கே. பாலபத்தபெண்டி, இராணுவ அதிகாரி பிரிகேடியர் பீரிஸ், கடற்படை அதிகாரி பிரசன்ன ராஜரட்ன ஆகியோர் பத்திரிகையாளருடன் எதுவும் பேச

(2ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு தபால்கள் திருட்டு

(கொழும்பு)
வெளிநாடுகளில் இருந்து இலங்கையில்உறவினர்களுக்கு அனுப்பிய இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்களைக் களவாடிய ஒரு தபால் ஊழியரை தபால் திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கொழும்புக்கு மிகச் சமீபமாக வசிக்கும் மேற்படி ஊழியரின் வீட்டை தபால் அதிகாரிகள் திடீரென்று சோதனையிட்டபோது இந்த நீண்டநாள் திருட்டு கண்டுபிடிக்கப்

(2ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் முன்னுள் பிரதமர்

## மொரார்ஜி தேசாய் காலமானுர்

(புதுடில்லி)
இந்தியாவின் நான்காவது பிரதமரான மொரார்ஜி தேசாய் நேற்று பம்பாயிலுள்ள மருத்துவமனை ஒன்றில் காலமானுர்.

முன்னுள் பிரதமரான இவர் கடந்த இரு வாரங்களாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

காங்கிரஸ் கட்சி அல்லாத பிரதமரான இவர் தமது தந்தையைமருமகளை, மகளை தற்கொலைமூலம்இழந்தவர் சிறந்த

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

நாவற்குழி கண்டி வீதியில் 45 பரப்பு நெற் காணியுடன் கல் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்; ஆ. ஆனந்தராசா, 414/4, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-1442[

### வியாழ வக்கிர சஞ்சாரம்

(4-8-95 வரை) யுவவருஷ புத்தாண்டின் எல்லா ராசிப் பலன்களும் (நூலாசிரியர்: சத்யா), பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் விற்பனையாகின்றன. தினேஷ் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-1443)


### கால் நடை தடுப்பூசி சேவை

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளை நோயில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால் நடை உற்பத்தி உகாதார திணைக்களமும் இணைந்து இலவச தடுப்பூசி சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த பெப்ரவரி மாதம்யாழ் மாவட்டத்தில் 68300 கோழிகளுக்கும் 759 மாடுகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

### இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவுக்காக யாழ் மாவட்ட உதைபந்தாட்டசபை நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய அரையிறுதி ஆட்டத்தில் காங்கேசன்துறை யங்ஸ்ரேயலை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதவுள்ளது இப்போட்டி யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் பி.ப 3 மணிக்கு நடைபெறும். சி

### ஏற்பு தடுப்பு ஊசி மருந்து

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்திய சாலையில் ஏற்பு நோய்த் தடுப்பு ஊசி மருந்து வந்து சேர்ந்துள்ளதை அடுத்து திருக்குடும்ப கன்யர் மடத்தில் செயற்பட்டு வரும் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் ஏற்பு தடுப்பு ஊசி மருந்து இவ்வாரம் தொடக்கம் போடப்பட்டு வருகின்றது. -72

### ஓய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியப் பணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. 72

# உணவு வியாபார அனுமதி கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உணவு வியாபார அனுமதி கோரும் விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 28-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை தங்கள் உரிமத்திற்கான விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்காதோர் அவ்வப்பகுதி மாநகரசபை, நகர சபை, பட்டினசபை, கிராம சபையுடன் தொடர்பு கொள்ளுமாறும், உரிமம் பெறத் தவறுவோர்மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### சனசமூக நிலைய ஒன்றியம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட்டப் பிரிவின் சனசமூக நிலையங்களை இணைத்து பருத்தித் துறை வட்ட சனசமூகநிலையங்களின ஒன்றியமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காகவே இச்சனசமூகநிலையங்களின் ஒன்றியம் உருவாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வட்டப் பகுதியில் உள்ள சகல சனசமூகநிலையங்களின் விபரங்களையும் ஒன்றியம் திரட்டி வருகின்றது. 52

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—04—11**
**செவ்வாய் இரவு**

- 08-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- 08-10 அறிந்துகொள்ளுங்கள் தகவல் களஞ்சியம்
- 08-20 நலந்தானா
- 08-30 செய்திகள்
- 08-40 கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய 'பார்வைகள பலவிதம்''
- 08-50 மலரும் மொட்டுக்கள்

**1995—04—12**
**புதன காலை**

- 07-02 மாவீர வணக்கம்
- 07-15 நீங்கள் கேட்டவை
- 07-30 செய்திகள்
- 07-35 பத்திரிகை செய்திகள்
- 07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—04—11**
**செவ்வாய் மாலை**

- 05-01 சிந்தனைச் சிதறல்
- 05-02 எழுச்சிகீதம்
- 05-10 புதியவை
- 05-15 தமிழிசை
- 05-30 வானொலி மதியூகம்
- 06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
- 06-02 இவ்வாரம் இவர்
- 06-15 விளையாட்டுச் செய்திகள்
- 06-20 என் தெரிவு
- 06-30 மாலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

# யாழ்ப்பாணத்தவருக்கு இந்திய விசா வழங்க மறுப்பு

[பண்டத்தரிப்பு]

தமிழ் நாட்டிலுள்ள சைவ சமய திருத்தலங்களுக்கும், ஆலயங்களுக்கும் யாத்திரை செய்வதற்காக இந்தியா விசா கேட்டு விண்ணப்பித்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலருக்கு கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் விசா வழங்க மறுப்பு தெரிவித்து விண்ணப்பங்களை நிராகரித்து வருவதாக அறியப்படுகின்றது.

இதேவேளை சிலர் தரகர் அல்லது பிரயாண ஏஜன்ட் மூலம் ஐயாயிரம் ரூபாவரை லஞ்சம் கொடுத்து விண்ணப்பிக்கும் போது இலகுவாக விசாவை பெற்றுக்கொள்ள முடிவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு தமிழர்களை இந்திமா செல்ல அனுமதிப்பதில் இந்திய அரசு பல கட்டுப்பாடுகளை மேற்கொண்டு வருவதும் தெரிந்ததே. 72-சி

### அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்வி அலுவலகத்தின்கீழுள்ள பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் காரியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். சகல அதிபர்களும் இதில் கலந்துகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### புதிய இயக்குநர்சபை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய இயக்குநர்சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ் இயக்குநர்சபைத் தலைவராக திரு. விஞசித்தம்பி சேதுநாயகம் தெரிவானுர்.

உபதலைவராக திரு. கே. கே. இராஜகோபாலும் இயக்குநர்சபை உறுப்பினர்களாக திரு. கே. ஜெயச்சந்திரன், திரு. என். ஞானசம்பந்தம் பிள்ளை, திரு. வி. தெய்வேந்திரஐயர், செல்வி எஸ். வில்வமணி, செல்வி எஸ். குமுதினி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். 52-160

### தளபாடங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் தளபாடத் தட்டுப்பாட்டை நீக்கும்முகமாக சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியான வாங்கு, மேசை முதலான தளபாடங்களை பெற்றோர், பழைய மாணவர்கள் சேர்ந்து புதிதாகச் செய்து கொடுத்துள்ளனர். 139

### விறகுகள் திருட்டு

[அரியாலை]

யாழ். இராசாவின் தோட்டம் எம். இராச கோபால் என்பவருடையவீட்டில்கடந்த 9ம் திகதி வீட்டுக்காரர் வெளியே சென்ற சமயம் அங்கிருந்த விறகுகள் திருட்டுப் போயுள்ளதாக தெரியவருகின்றது.

### நோயாளர் அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். போதனு வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவில் அதிகமான நோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். சாய்ச்சல் மற்றும் வெப்புநோய் ஆகியவற்றுல் பீடிக்கப்பட்டு அதிகமானேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். -59

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுத்துவிட்டனர்.

இரத்மலானை விமானநிலையத்தில் வந்து இறங்கியதுமே திரு. பாலபத்தபெண்டி உடனடியாக ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்திக்கச் சென்றுவிட்டார்.

பத்திரிகையாளர்கள் ஏமாற்றத்துடன் வெறும் கையுடன் திரும்பினர். -இ

### வெளிநாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் வேலை செய்யும் இந்த ஊழியரின் வீட்டில் இருந்து திறக்கப்பட்ட ஆயிரத்திற்கும் அதிகமான கடிதங்களையும், திறக்கப்படாத நிலையில் உள்ள 1911 கடிதங்களையும் தபாலக அதிகாரிகள் கைப்பற்றினுர்கள்.

திறக்கப்படாத நிலையில் உள்ள கடிதங்கள், உரியவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்று தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வி-இ

# வறுமை நிவாரண திணைக்களம் ஜூன்வரை செயற்படும்

(கொழும்பு)

உணவு முத்திரை திட்டத்தை ஜூன் மாத துடன் முடித்து கொள்வது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய வறுமை நிவாரண திணைக்களம் ஜூன்மாதம் வரை செயற்படும்.

இதேவேளை மேலதிக உணவு முத்திரைகளின் புதியதொகுதி ஒன்று ஜனவரி மாதத்திலிருந்து பாடசாலை மாணவர்களுக்கென வழங்கப்பட்டு வருகிறது-

இவற்றின் பெறுமதி 108 கோடி 50 லட்சம் ரூபா உணவு முத்திரைகளையும், மண்ணெண்ணை முத்திரைகளையும் வழங்குவதற்கென 145 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.

குழந்தைகளை பிரசவித்த தாய்மாருக்கான விசேட உணவு முத்திரைகளை வழங்கவென மேலதிகமாக 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது -ரி

### எரிபொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருந்தார்கள். ஆகவே அதைப்பற்றி நாங்கள், இங்கு விவசாயப் பொருட்களின் தேவை பற்றி வலியுறுத்திகூறியுள்ளோம். அவர்கள் அதை கருத்தில் எடுத்து ஜனுதிபதியுடன் கதைத்து இன்று இதற்கான பதிலை தருவதாக கூறியுள்ளனர்.

குறிப்பாக இவை தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுகளை எமக்கு தெரிவித்தார்களே தவிர மிகவிரைவாக இதனை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான எந்த முடிவுகளுடனும் அவர்கள் வரவில்லை.

நாங்கள் ஏற்கனவே எமது மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள்தொடர்பாக 4கோரிக்கைகள் குறித்தும் தெளிவாக ஒரு பட்டியலை தயாரித்துள்ளோம். மேற்படி 4 கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் போது, அது 19ம் திகதிக்கு முன் அரசு இதற்குசாதகமான முடிவை எடுத்து நடைமுறைப் படுத்தவேண்டும் இதுவெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் அரசியல் பேச்சுக்கு தயாராகவுள்ளோம் என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறியுள்ளோம். (சி-இ)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிவைக்கப்பட்டன. ஒரு பகுதியினருக்கு இன்று முடிவுகள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் பி. சி. ஆர். குணரட்ண இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கைவில்,

80 வீதமான கொழும்பு மாவட்ட பாடசாலைகள் நேற்று மேற்படி பரீட்சை பெறுபேறுகளை பெற்றுக் கொண்டன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு பெறுபேறுகள் அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு ஐந்து லட்சத்து 76 ஆயிரத்து 622 பரீட்சார்த்திகள் தோற்றியதும் இவர்களுள் மூன்று லட்சத்து 62 ஆயிரத்து 921 பேர் பாடசாலை மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. -க-இ

### பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிடமிருந்த துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

இச்சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது;புத்தளம்மாவட்டத்திலுள்ள அட்டவலுவ தேக்கு மர பாதுகாப்பு பிரதேசத்தில் மரங்கள் வெட்டப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து புத்தளம் வன பரிபாலன உத்தியோகத்தர் உட்பட நான்கு உத்தியோகத்தர்கள் இந்தப் பகுதியை சுற்றிவளைக்க முற்பட்ட போது அங்கு ஏற்கனவே ஆயுதங்கள் சகிதம் காத்திருந்த ஒரு கோஷ்டி இவர்கள் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டது,

இத்தாக்குதலில் படுகாயமடைந்த நான்கு உத்தியோகத்தர்களும் புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், ஆனமடுவ பொலிஸார் இச்சம்பவம்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். ரி-இ

### இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தீயவாதியான இவர் 1975-ம் ஆண்டு இந்தியாவில் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டபோது அதை எதிர்த்ததினுல் அப்போதைய பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தியினுல் 18 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். திருமதி இந்திராகாந்தியின் அரசை தோற்கடிகத திரு. தேசாய் பாகிஸ்தானின் மிக உயர் விருதைப் பெற்ற ஒரே ஒரு இந்தியனும் ஆவர். -வி-க-இ

### பூநகரி

(1ம பக்கத் தொடர்ச்சி)

விடின், பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் ஒரு தரப்பினர் என்ற வகையில் நாம் இந்தப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை அற்றநிலையில் அதிலிருந்து ஒதுங்கிக்கொள்வோம்.

கிழக்கில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாதுஎன்ற நிலையிலேயே அரசு இன்றும் உள்ளது. அது எம்மால ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று அதாவது தாக்குதல் நிறுத்தம் சம்பந்தமாக எமது தலைவரும், ஜனுதிபதியும் ஒபபமிட்ட ஒப்பந்த நகலில்கூட இது குறிப்பிடப்படவில்லை. அவர்கள் புதிதாக ஒரு நிபந்தனையை விதித்து எமது போராளிகளை ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது எனக் கூறுகின்றனர். இது போராளிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இது பற்றியும் எமது தீர்க்கமான முடிவை இப்பேச்சுக்களில் வலியுறுத்தினேம்· சி-இ

### சாதகமான

1-ம் பக்கத் தொடர்ச்சி)

படாததால் இப்பேச்சுக்கள் எமக்குத் திருப்தி தரவில்லை. கடல்வலய தடைத் தளர்வு குறித்து அவர்கள் தந்த பதிலில்கூட மோசமான கட்டுப்பாடுகள் இருந்ததை நாம் சுட்டிக் காட்டினேம். இதுசம்பந்தமாகவும் எதுவித முடிவும் எடுக்கப்பட முடியவில்லை.

மீன்பிடித் தடையில் குறிப்பாக கரையோரப் பிரதேசங்கள் பெருமளவில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த முகாமைச் சுற்றி இரு கடல் மைல் பிரதேசத்திற்குள் மீன் பிடிக்க எமது மீனவர் செல்லக்கூடாதென குறிப்பிட்டிருந்தார்கள்.

அடுத்தது முக்கியமாக விடத்தல்தீவிலிருந்து கேரதீவு வரையுள்ள அதாவது மீன்வளமுள்ள கடல் பிரதேசத்திலும் கட்டுப்பாட்டை விதித்துள்ளார்கள். அதாவது 5 மைல்களுக்கு அப்பால் சென்று மீன்பிடிக்கக்கூடாதென கட்டுப்பாட்டை விதித்துள்ளார்கள். ஆகவே இதனை ஒட்டுமொத்தமாகபார்க்கின்ற போது கரையோரப்பிரதேசங்கள் பெருமளவில் இராணுவக் கட்டுப் பாட்டினுள் இருக்கிறது. குறிப்பாக சில கட்டிப்பாடுகளையும் போட்டிருந்பதால் இந்த கடல் வலய தடைதளர்வு என்பது பெரிய அளவில் எமது மக்களுக்கு அனுகூலமாக அமையவில்லை என நாங்கள் சுட்டிக் காட்டியுள்ளோம். -சி-இ

### மணிவாக்கு

எதிர்த்துப் பேசினுல் சுடச்சுடப் பதில் கொடுத்துவிட முடியும். புகழ்ந்து பேச ஆரம்பிப்பவனை அப்புறப் படுத்துவது கடினமான காரியம்.

- கண்ணதாசன்

## நமது நோக்கு

### 41 நிமிடச் செலவு

''41 நிமிட நேரம் நடக்கும் போருக்கான செலவு ஒரு நாடாளு மன்ற உறுப்பினரின் ஒரு வருட பன்முக வரவுசெலவுத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்குச் சமனுகும்!''

- இப்படி மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கவலை தெரிவித்துள்ளார்.

இவர் மாத்திரமல்ல - அரச தரப்பிலுள்ள வேறு பலருமே போருக்கான ஆண்டுச் செலவு, தினசரிச் செலவு, நிமிடச்செலவு என்றெல்லாம் கணக்குப் பார்தது, போரால் ஏற்படும் பொருண்மிய அழிவுகளைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அப்படியிருந்தும் - சிலரது பேச்சுகளும் செயல்களும் போரைத் தொடர்வதற்கே வழி வகுக்கின்றது.

காரணம் என்ன? ஆண்டாண்டு காலமாக தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிப் பழகிப்போன சிந்தனை வட்டத்திலிருந்து அவர்கள் விலகி வரவில்லைப் போல் தெரிகிறது.

ஆனபடியினுல் தான் - ''யுத்தத்தினலாயினும் சமாதானத்தை அடைந்தே தீருவோம!'' எனச் சிலரைச் சூளுரைக்க வைக்கிறது.

''நானும் சீருடையணிந்து களத்தில் நிற்பேன்!'' எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரையே கூறவைக்கிறது.

முரண்பட்ட கருத்துக்களை தெளிவற்ற சிந்தனையை வெளிக்காட்டும் போக்கு ஏன் என்பதைப் பதவியிலிருக்கும் வேறு சிலர்விளக்கிவருகிருர்கள்.

''தமிழர்களின் தெய்வங்களான விஷ்ணு, கணபதி ஆகியவர்களையும் வழிபடும் சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்குவது ஏன்?''

இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிருர் வடகிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா.

''குறுகிய நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளினுலேயே இந்த நிலை ஏற்பட்டது!'' என அவரே பதிலும் கூறியுள்ளார்.

மக்கள் படும் அன்றுட வேதனைகளைப் போக்காது, போருக்காக நாட்டின் வளம் பாழடிக்கப் படுவதைக் கருதாது, செயற்படும் ஆட்சியாளர்களை மக்கள் இனம்கண்டு செயற்படுவார்கள் என நம்புகிருேம்!

# ''ஹோமியோபதி வைத்தியத்தின் சிறப்பு மேலோங்கிநிற்கிறது''

## பட்டமளிப்பு விழாவில் உரை

(யாழ்ப்பாணம்)

வைத்தியததுறையின் மகிமையும் டாக்டர் ஹனிமனின் அசைக்கமுடியாத தத்துவத்தில்தோன்றியஹோமியோபதி வைத்தியத்தின்சிறப்பும்இன்று உலகளாவிய ரீதியில் மேலோங்கி நிற்கிறது.

யாழ். இந்துக்கல்லூரி குமாசாமி மண்டபத்தில் நடைபெற்ற ஹோமியோபதி பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சித்த மருத்துவக் கல்லூரி முன்னுள் அதிபர் டாக்டர் இராசரத்தினம் தனது உரையில் இவ்வாறு தொவித்தார்.

சர்வதேச திறந்தவெளி மாற்றுமுறை மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வடஇலங்கை ஹோமியோபதி சங்கம், வடஇலங்கை அக்கு பஞ்சர்சங்கம் நடத்திய இப்பட்டமளிப்பு விழாவில் டாக்டர் இராசரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய சூழ்நிலையில் வைத்தியர்களின் சேவை மிக முக்கியமான தொன்ருக உள்ளது என்றும் கூறினுர்,

இந்நிகழ்வின்போது சித்த வைதத்திய மருத்துவக்கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் திருமதி கைலாசபதி பொன்னுடை போர்த்திக்கௌரவிக்கப் பட்டார். இன்றைய 3வது பட்டமளிபு வைபவத்தில் கலந்து கொண்டு 31 டாக்டர்கள் பட்டங்களைப் பெற்றனர்,

162-ரி

## இன்று

(சொழும்புத்துறை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் பங்குனிக் கடைசிச் செவ்வாய் வருடாந்தப் பொங்கல் விழா இன்று 11ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும். -154

0 0

(கொழும்புத்துறை)

பொன்னுலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று 11ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ஏகாதசி விசேட அபிஷேகம். பூசை, ஆராதனை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. -154

## புலதும் பத்தும்

### கல்வியா? செல்வமா?

1987 - இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குமரி அனந்தன் (தற்போதைய தமிழக காங்கிரஸ் தலைவர்) ஐரோப்பாவிற்குப் போயிருந்தார். இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஜெர்மனி விரைவாக வளர்ந்ததை வியந்தார்.

''கட்டடங்கள் இடிந்தாலும் சட்டடக்கலை அழியவில்லையே! கட்டடங்கள் தகர்க்கப்பட்டாலும் அறிவை அழிக்கமுடியவில்லையே!'' என்று காரணமும் கூறினுர்.

முன்பு - ஆறுமுகநாவலர் நான்காம் பாலபாடத்தில் (ப. 33ல்) தந்த அறிவுரை என்ன? ''செல்வப்பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசன் ஆகியோராற் கொள்ளப்படும். கல்விப் பொருளோ எவராலும் கொள்ளப்படமாட்டாது: ஒன்ருலும் அழிக்கப்படமாட்டாது!

அறிவைப் பெருக்கி அழிவைத் தடுப்போம்; மீண்டும் தலை நிமிருவோம்!

— மயூரன்

# விஷேட ஹெலிகொப்டர்மூலம் அரசகுழுவினர்வந்திறங்கினர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுடனுன நாலாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக அரச தரப்பு குழு நேற்று காலை 9-30 மணியளவில் விசேட ஹெலி மூலம யாழ். சென்ஜோனஸ் கல்லூரி மைதானத்தை வந்தடைந்தது.

ஜனுதிபதியின் செயலர் திரு. கே பாலபத்தபென்டி தலைமையிலான குழுவில்அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்ணண்டோ, கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையானர் கலாநிதி ஜெயதேவ உயாங்கொட மோர்ஜ் மனித உரிமை குழு தலைவர் சாள்ஸ் அபயசேகரா, பிரிகேடியர் பீரிஸ், கப்டன் பிரசன்னு ராஜரட்ண ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

இக்குழுவினர்ஹெயில் வந்திறங்கிய போது இவர்களை விடுதலைப்புலிகளைச் சேர்ந்த திரு. டொமினிக் திரு. சுதா, திரு. பாப்பா. திரு. தயாநிதி மாஸ்ரர் ஆகியோர் வரவேற்றனர் இதைத்தோடர்ந்து இக்குழுவினர் உடனடியாகவே புலிகளின் வாகன அணியில் பேச்சுவார்த்தை நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

காலை 10 மணியளவில் அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிப் பிரதிநிதிகளுக்குமிடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகின. - சி

வகுப்பு ரீதியாக

# கையெழுத்து சஞ்சிகை வெளியிட நடவடிக்கை

(உடுவில்)

மாணவர்களின் தமிழ்மொழி ஆற்றலை விருத்திசெய்யவும், அவர்களின் ஆக்கத்திறன்களை ஊக்குவிக்கவும் வகுப்பு ரீதியாக கையெழுத்து சஞ்சிகைகளை வெளியிட யாழ்ப்பாணம் சல்வித்திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக மாணவர்களிடையே போட்டியினை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலயமட்டங்களில் நடததப்படும்.

கையெழுத்துச் சஞ்சிகை சம்பந்தமான போட்டிகளில் ஆண்டு 4 முதல் 13 வரை கல்விகற்கும் சகல மாணவர்களும் பங்குபற்ற வாய்ப்பளிக்கும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் ஆண்டு 4முதல் 13 வரையான வகுப்புக்களில் எத்தனை வகுப்புப் பிரிவுகள் உண்டோ அத்தனை கையெழுத்துச் சஞ்சிகைகள், வகுப்புக்கு ஒன்று என்றவகையில் தயார்க்கப் படவேண்டும் எனவும் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தினுல் பாடசாலை அதிபர்களுககு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 101

### விவசாயிகளுக்கு கடன்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுவினூடாக வழங்கப்படும் கிராமிய நிதியம் கடனுதவிக்காக சங்கானைவட்டத்திலுள்ள 81 குடும்பங்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டுள்ளன.

மேட்டு நிலப்பயிர் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான கடன வழங்கல் நடவடிக்கையாக மேலும் கோப்பாய் வட்டத்தில் 252 குடும்பங்களுக்கு இக் கடன் வழங்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேறகொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அன்னைபூபதி நினைவுநாள் கருத்தரங்கு, சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி வட்ட சிற்றூர் ரீதியாக இன்று நடைபெறவுள்ள நினைவுக்கருத்தரங்குகளின்விபரம் வருமாறு கொடிகாமம் செல்வா ச.ச. நிலையம்வரணி வடக்குசாவகச்சேரி வளர்மதி ச.ச. நிலையம்மட்டுவில்தெற்கு உடுப்பிட்டி மாவீரர் படிப்பகம் மாவடி உடுப்பிட்டி பருத்தித்துறை ஓடக்கரை ச.சநிலையம் கல்லூரி வீதிபருத்தித்துறை கரவெட்டி நெல்லியடி வடக்கு சிறிமுருகன் ச.ச நிலையம் நல்லூர் கலைமகள் ச.ச நிலையம் கந்தர்மடம் அரியாலை டயஸ் குடியிருப்பில் மணியரசன் குடியிருப்பு கோப்பாய்-கோப்பாய் சூசையப்பர் கோவிலடி சண்டிலிப்பாய் கட்டுடை சுபாஸ்ச,ச நிலையம் சங்கானைமுதலிகோவிலடி வட்டு தென் மேற்குதெல்லிப்பழை ஆச்சிரம முகாம்,

சிரமதானம் நடைபெறும் இடங்களின் விபரம்வருமாறு டயல் குடியிருப்பு அரியாலை மணியரசன் குரயிருப்பு அரியாலை உடுவில் நோய் முகாம் சுன்னுகம், ரி

### பொருட்கள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தமிழ் புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு பங்கீட்டு அட்டைக்கு சீனி, மைசூர் பருப்பு, மா ஆகிய பொருட்களை சங்க கிளைகள் ஊடாக விநியோகித்து வருகின்றது.

# இராசி பலன்

**11-04-1995**

செவ்வாய்க்கிழமை

**(தமிழுக்கு பங்குனி-28)**

துவாதசி முன்னிரவு 10-45 வரை. பூரம் பின்னரவு 5.39 வரை. அமிர்தயோகம் இராகு காலம் மாலை 3-06 முதல் 4-36 வரை. சுபவேளை 10-36 முதல் 12-06 வரை.

மேடம்- பயணக் கஷ்டம், தாமத உதவி, வேலைப்பழு.

இடபம்- பணக் குறைவு: வீணபழி கேட்டல், அலைச்சல்

மிதுனம்- குடும்ப மகிழ்ச்சி. சத்துரு ஜயம், தாய்வழி உறவு.

கடகம்- இனசனவிரோதம், சரீரபலக்குறைவு, விவாதம்.

சிங்கம்- தொழில் லாபம், பெரியோர் நட்பு, பயணம்.

கன்னி- காரியக்கேடு, புத்திரர் கவலை, தப்பபிப்பிராயம்

துலாம்- அதிகார சித்தி, முயற்சி பலிதம், நிலைப்பேறு.

விருச்சிகம்- தண்பர் ஆகதரவு, களத்திர சுகம், விவேகம்:

தனுசு- தொழில் பங்கம், ரோக பீடை, அவப்பெயர்.

மகரம்- குடும்ப மனஸ்தாபம், புத்திக்குறைவு, சுபவிரயம்.

கும்பம்- பணியாள் உதவி. தொழில் உறவு, சயன போசன சுகம்.

மீனம்- புதிய உதவி, நய வஞ்சகத்தனம், சகோதர உதவி.

— ஜோஸ்யர்

# அகதிகளின் பொருட்களை ஏலத்தில் விட முயற்சி!

(கொழும்பு)

தமிழகத்தில் இருந்து நாடு திருப்பிய அகதிகளால் கொண்டு வரப்பட்டு சுங்கப் பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்ட பொருட்கள் ஏப்ரல் 16ம் திகதிக்கு முன்பு மீட்கப் படாது விட்டால் அவற்றை ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளிடம் இருந்துகைப் பற்றப்பட்ட பொருட்களை அவர்களிடமே உடன் திருப்பி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் இரா சம்பந்தன் ஜனுதிபதிசந்திரிகாவிடம் மகஜர்மூலம்கேட்டுள்ளார். (ம-ரி)

### தவக்கால நற்சிந்தனை

''இறைவனின் வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் மிக்கது''

(எபி. 4:12)

வார்த்தையின் வடிவம் வரலாற்றின் வள்ளல். வார்த்தைகளால் எம்மை வாழ்வித்தவர். இறுதி நேரத்திலும் வார்த்தைகளை உதிர்த்தார். சிலுவையில் தொங்கியபோதும் மானிடம் வாழ, கடைசி வார்த்தைகளை எமக்குச் சொத்தாக, முத்தாக. இதயத்தின் வித்தாக விடுகிருர்: சிந்தனை செய்ய நாம் முன்னிற்போம்.

— தா. மைதிலி

நம் நாடு உயர்வாகும்
நாடெல்லாம் பயிர் செய்தால்

# பேச்சு இன்று தொடரும்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான நாலாம் கட்டப் பேச்சின் தொடர்ச்சி, இன்று காலை மீண்டும் ஆரம்பமாகும்.

நேற்றுக் காலை, மாலை என இரு சுற்றுக்களாக நடைபெற்ற பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் முன்வைத்த 4 கோரிக்கைகள் தொடர்பாக அரசுப் பிரதிநிதிகளால் இறுதி முடிவு எடுக்க முடியவில்லை. இதையடுத்து அக்குழுவைச் சேர்ந்த பாலபத்தபென்டி, பிரிகேடியர் பீரிஸ், கப்டன் பிரசன்ன ராஜரட்ன ஆகியோர் நேற்று மாலையில் கொழும்பு திரும்பினர்.

இவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் புலிகள் நேற்றைய பேச்சில் வற்புறுத்திய விடயங்கள் குறித்து விரிவாக விளக்கி, அவற்றுக்கான இறுதி முடிவை ஜனாதிபதியிடம் இருந்து பெற்று, இன்றைய பேச்சில் அரசுத் தரப்பில் கலந்துகொள்ளும் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ, ஜெயதேவ உயாங்கொட, திரு. சார்ள்ஸ் அபயசேகரா ஆகியோருக்கு 'றேடியோ' செய்தி மூலம் அறிவிப்பார்கள்.

இதன் அடிப்படையில் இன்று காலை 10-00 மணியளவில் அரசுக் குழுவினர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவர். புலிகளின் சார்பில் நேற்றைய பேச்சுக்களில் கலந்துகொண்ட திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், திரு. டொமினிக், திரு ரவி ஆகியோர் பங்குபற்றுவர். சி-இ

# மோதல் தவிர்ப்பு உடன்பாடு

மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை யுத்தநிறுத்தமாக மாற்றுவதில் அரசுக்கு அக்கறை இல்லை. தாக்குதல் நிறுத்தத்தில் கூட சில நடைமுறைப் பிரச்னைகளை தீர்க்கக் கூடிய நிலையில் அரசு இன்று இல்லை. இந்நிலையில் மோதல் தவிர்ப்பை நிரந்தர யுத்த நிறுத்தமாகமாற்றுவதில் அவர்களுக்கு நேற்றைய பேச்சில் அக்கறையில்லை. இது பற்றி நாம் வலியுறுத்தினோம் ஆனால் அரசு தரப்பில் இது பற்றி அவர்கள் பேச முனையவில்லை.

வெளிநாட்டு கண்காணிப்பு குழுவினர் இயங்குவது தொடர்பாகபல தடவைகள் நாங்கள் வற்புறுத்தி கூறியதுடன் அக்குழுவினர் இயங்குவதற்கு ஏற்ப மோதல் தவிர்ப்பு உடன்பாட்டுடன் இணைப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமென அரசுக்கு சுட்டிக்காட்டியிருந்தோம். அரசு இந்த விடயத்தில் அக்கறை காட்டாததால் வெளிநாட்டு கண்காணிப்பு குழுசெயற்பட முடியாத நிலையே உள்ளது.

நேற்றைய பேச்சுகளை பொறுத்தவரையில் அரசு எமது மக்களின் அவல நிலையை புரிந்து கொண்டு முக்கியமான முடிவுகளை எடுக்கக்கூடிய நிலையில் இல்லாததையேஎமக்கு உணர்த்தியுள்ளது குறிப்பாக இந்தப் பேச்சுக்களில்கலந்து கொண்ட அங்கிலிக்கன் ஆயரும் ஏனையவர்களும் பல தடவை மக்களின் பிரச்னைகளை நேரடியாகவே பார்த்தவர்கள். கிளாலி பாதையூடாகப்பயணம் செய்தவர்கள் இந்நிலையில் அரசின் இறுக்கமான நிலைப்பாட்டை அவர்களும் நியாப்படுத்தியமை எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சி-இ

# அரச குழுவின் ஒரு பகுதி நேற்றுகொழும்புதிரும்பியது

## ஜனாதிபதியுடன் இரவு அவசர சந்திப்பு

(கொழும்பு)

நாலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட அரசுக் குழுவின் ஒரு பகுதியினர் நேற்று இரவு ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து, புலிகளுடனான நேற்றைய பேச்சுக்கள பறறி விரிவாக விளக்கிக் கூறியுள்ளனர்.

நேற்றைய பேச்சுக்களை முடித்துக்கொண்டு நேற்று மாலை 5-00 மணியளவில் கொழும்பு திரும்பிய ஜனாதிபதியின் செயலர் பாலபதத பென்டி, பிரிகேடியர் பீரிஸ், கப்டன் பிரசன்ன ராஜரத்ன ஆகியோர் நேற்று இரவு ஜனாதிபதியைச் சந்துத்துள்ளனர்.

நேற்றைய பேச்சின்போது புலிகள் வற்புறுத்திய கோரிக்கைகளை இவர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினர். இது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவின் இறுதி முடிவு, இன்று காலை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அரசுக் குழுவின் ஏனைய பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்படும். இதன் அடிப்படையில் அவர்கள் இன்று புலிகளுடன் பேசுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சி-இ

# 2 சுற்று பேச்சு நடந்தது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான நாலாம் கட்டப் பேச்சுக்கள, நேற்று இரு சுற்றுக்களாக நடைபெற்றன.

நேற்றுக் காலை 10-00 மணியளவில் யாழ் நகரில் நடைபெற்ற இப்பேச்சுசள் நண்பகல் 2-00 மணி வரை தொடர்ந்தது. இதன் பின்னர் பேச்சுக்கள் மீண்டும் 3-00 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 5-00 மணி வரை நடைபெற்றது.

அரச குழுவில் ஜனாதிபதியின் செயலர் திரு. பாலபத்தபெண்டி. அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ, பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட, திரு. சார்ள்ஸ் அபயசேகரா, பிரிகேடியர் பீரிஸ், கப்டன் பிரசன்ன ராஜரட்ன ஆகியோரும், புலிகளின் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு ரவி ஆகியோர் கலந்துகொண்டனர். சி இ

# அரசு இழுத்தடிப்பு

அரசு இதுவரை எமது அன்றடபிரச்னைகளை தீர்க்கமுயலாது இழுத்தடித்து வருகிறது. இந்த இழுத்தடிப்பின் நம்பிக்கையீனமே எம்மை ஒரு காலக்கெடு விதிக்கும் நிலைக்கு தள்ளியது. தற்போதைய நிலையில் அரசு இந்த 4 கோரிக்கைக்கும் ஒரு தீர்வை கண்டு எமது மக்களின் வாழ்க்கை நிலையை சுமுகமான நிலைக்கு கொண்டுவந்தாலதான் நாம் ஏப்ரல் 19-ந் திகதிக்குப்பின் தொடர்ந்து சாதகமான முடிவை எடுத்து பேச்சுக்களை தொடர டிமுயும்.

ஜனாதிபதி பூநகரி இராணுவ முகாமை அகற்றி ஒரு போக்குவரத்துப் பாதையை திறப்பதற்கு கடினமாக இருந்தால் அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் எமது பிரச்னையை தீர்ப்பது தொடர்பாகவும் முடிவெடுப்பது அவருக்கு சிரமமாகத்தானிருக்கும். அப்படியொரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு தற்போது வடக்கு - கிழக்கில் உள்ள 200க்கும் மேற்பட்ட இராணுவ முகாமில் ஒன்றை அகற்றி ஒரு முடிவைக் கொண்டு வருவது சாத்தியப்படாதென்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இது பற்றி நேறறைய பேச்சில் நாம் விளக்கமாக கூறினோம். நேற்றைய பேச்சில் நாம்எமது 4 கோரிக்கைகள் குறித்தும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளோம். ஆனால் ஜனாதிபதியின் முடிவை பொறுத்தே இனி அடுத்த நடவடிக்கை அமையும்

இந்தப்பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதிக்கு விரிவாக விளக்கும்படி கூறியுள்ளோம். ஜனாதிபதி எடுக்கும் முடிவைப் பொறுத்தே இன்றைய பேச்சுக்கள் எவ்வாறு அமையும் எனக்கூறமுடியும் எனவும் அவர் தெரிவிததார். சி-இ

# புலிகளுடன் நடத்திய பேச்சு திருப்திகரமாய் இருந்தது

— பிரிகேடியர் பீரிஸ் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுடன் நேற்று நடைபெற்ற பேச்சுக்கள் திருப்திகரமாய் இருந்தன. எனினும் நேற்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்களுக்கான முடிவு இன்று நடைபெறும் பேச்சுக்களின் போதே எடுககப்படும்.

இவ்வாறு அரச தூதுக்குழுவில் அங்கம் வகித்த இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பீரிஸ் நேற்றைய பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

நேற்றைய பேச்சுக்களில் அன்றடப் பிரச்னை தொடர்பாக புலிகள் முன்வைத்த நான்கு கோரிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன. எனினும் எதுகுறித்தும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இன்று மீண்டும் பேச்சுக்கள் நடைபெறும். அதன்போதே இவைபற்றி இறுதிமுடிவு எடுக்கப்படும்.

இன்றைய பேச்சுக்களில் ஆயர்கென்னத்பெர்னாண்டோ கலாநிதி ஜெயதேவ உயாங்கொட திரு. சாள்ஸ் அபயசேகரா ஆகியோர் பங்குபற்றுவர். நாங்கள் (பிரிகேடியர் பீரிஸ், திரு, பாலபத்தபென்டி கப்டன் பிரசன்ன ராஜரட்ண) பங்குபற்றமாட்டோம்.

கடல்வலயத் தடை நீக்கம் பற்றி பேசினோம். அது திருப்திகரமாய் அமைந்தது. இன்று நடைபெறும் பேச்சுக்களிலேயே இதுபற்றி இறுதிமுடிவு எடுக்கப்படும். இதன்போது வேறு விடயங்கள் பற்றியும் கதைப்போம் இதேபோன்றே எரிபொருள் தடைநீக்கம், பூநகரி பாதை விவகாரம், கிழக்கில் போராளிகள் ஆயுதங்களுடன நடமாடுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. எனினும் இன்று நடைபெறும் பேச்சுளின்போதே இறுதிமுடிவு எடுக்கப்படும்.

நேற்றைய பேச்சுக்களின் போது எந்த விடயம் குறித்தும் முடிவெடுக்கப்படாத போதும் விரிவாக அவைபற்றி ஆராயப்பட்டன, பூநகரி பாதைதொடர்பாகவும ஆராயப்பட்டது. எனினும் அது பற்றியும் முடிவெதுவும் எடுககப்படவில்லை. எனினும சில விடயங்கள் குறித்து சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

புலிகளின் நான்கு கோரிக்கைகள் தொடர்பான விடயங்கள் படையினருடன் சம்பந்தப்பட்டிருப்பதால் நீங்கள் (இராணுவ' கடற்படை பிரதிநிதிகள்) இல்லாமல் எப்படி இன்றைய பேச்சுக்களில் அரசதரப்பினர் இறுதி முடிவெடுப்பர் எனக்கேட்ட போது அதுபற்றி நேற்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்டுள்ளதாலும் இதுபற்றிஇறுதி முடிவு கொழும்பில் எடுக்கப்பட்டு இங்கு தங்கிநிற்கும் அரசகுழுவினருக்கு இன்று அறிவிக்கப்படும் என்றார்.

விடுதலைப்புலிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடுவை ஏப்பிரல் 19ம் திகதி வரை நீடித்துள்ளனர். அதற்கிடையில் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமா எனக் கேட்டபோது, இவை பற்றி பேசப்படுவதால் நாம் புலிகள் காலக்கெடு விதித்திருப்பதாக கருதவில்லை' தமது கோரிக்கைகள் நிறைவேற்றுமாறு திகதியை முன்வைத்துள்ளார்களே தவிர அது ஒரு காலக்கெடுவல்ல என்றார்.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் படையினருக்கு பல வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு ஆட்கள் சேர்க்கப்படுவதுடன் அவர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்படுகிறதே என்று கேட்ட போது, அது வழமையானதொரு செயற்பாடே தவிர வேறெதுவுமில்லை. மோதல் தவிர்ப்பு காலம் என்றாலும் படையினர்தமக்கு தேவையான பயிற்சியை பெறுவதிலும் அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதிலும் தவறில்லை என்றார்

சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடைந்தால் யுத்தம் நடாத்தவும் தயங்கப்போவதில்லை என அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கூறிவருகின்றாரே எனக்கேட்டபோது அவர் அவ்வாறு கூறியிருக்கமாட்டார். அதில் உண்மையில்லை. அவரை சந்தித்த படையினர் சமாதானத்திற்கு ஆதரவு தெரிவித்தபோது அவர் எப்படி யுத்தம் நடாத்தத் தயங்க மாட்டோம் எனக் கூறுவார். அந்த செய்தியில் உண்மையில்லை என்றார்.

தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுகள் வெற்றி பெறுமா எனக் கேட்டபோது வெற்றிபெறவேண்டும் என்றே விரும்புகிறோம் எனவும் கூறினார். -சி

## -ஆயர் கென்னத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சு. ப. தமிழ்செல்வன், நேறறு பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார். அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்;

கிளாலிக் கடல் ஊடாகப் பல இன்னல்களின் மத்தியில் யாழ். நகர் வந்து தமிழ்மக்கள் படும் கஷ்டங்களை, கண்கூடாககண்டு வெளிஉலகுக்குத் தெரிவித்த ஆயர் கென்னத பெர்னாண்டோ தமிழ் மக்களின் அன்றடப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு குரோத மனப்பான்மையுடன் செயல்படும் இன்றைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை நியாயப்படுத்த யாழ். நகர்வந்துள்ள அரச தரப்பில் சேர்ந்து கொண்டது எமக்குப் பெரும் ஆச்சரியத்தையே ஏற்படுத்தியுள்ளது என்று கூறினார். வி-இ

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவால் நடாத்தப்படும். மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய அரை இறுதியாட்டம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும். யாழ். ஹென்றீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்ரேயல்விளையாட்டுக்கழகம இப் போட்டியில் மோதவுள்ளது.

## பென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட ரயில்வே திணைக்கள ஒய்வூதியர்களின் ஏப்ரல் மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவினரால் அந்தந்தவங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் வங்கிகளுக்குச் சென்று இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் வவுச்சர் கிடைக்காதவர்கள் ஒய்வூதியப் பிரிவு கணக்காளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (71)

## காலக்கெடுபற்றி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றமும்இல்லை. 6மாத காலமாக இழுத்தடிப்பாகவே இருந்துவருகிறது. ஆகவே நாங்கள் மிகவும் பொறுமையாக இருந்து ஏப்ரல் 19ம் திகதியை ஒரு கால எல்லையாக கொடுத்துள்ளோம். இதற்குள் எமது மக்களின் பிரச்னையை தீர்க்காதுவிடின் நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து ஒதுங்கிக்கொள்வதாக எமது தலைவர் ஏற்கனவே தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளபடி நாம் இப்பேச்சுக்களில் வலியுறுத்திக் கூறினோம். [சி-இ]

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office S i Lanka under Licence number B/1633613.